**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.550/2025**
**வழக்கு சாட்சி PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சோலையப்பன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சோலையப்பன் | தொழில் | : | சார்பு ஆய்வாளர் |
| கிராமம் | : | ஆலமநாயக்கர்பட்டி | வயது | : | 59 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 27.04.2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சிவகிரி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வளராக பணிபுரிந்து வருகிறேன். முன்பு ஊத்து மலை காவல் நிலையத்தில் உதவி ஆய்வளராக பணிபுரிந்த போது கடந்த 18.06.2025 ம்தேதி மாலை 16.00 மணிக்கு நானும், என்னுடன் தலைமை காவலர் 1384 தமிழ்செல்வன், முதல் நிலை காவலர் 2010 காசி விஸ்வநாதன் என்பவரும் ஊத்துமலை – சங்கரன் கோவில் ரோட்டில் அண்ணாமலை புதுார் விலக்கில் விலக்கிலிருந்து அண்ணாமலை புதுார் செல்லும் ரோட்டில் சந்தேகப்படும் படியாக பின்னர் பெயர் விலாசம் தெரிந்துக்கொண்ட முத்துக்குமார் என்பவர் நின்றுக்கொண்டிருந்தார். அவரை சோதனை செய்தபோது முதுகுக்கு பின்னால் பார்த்தால் பயப்படும் பெரிய அருவாளை வைத்திருந்தார். அவரை விசாரித்தபோது அவர் அந்த வழியாக செல்லும் நபர்களிடம் பணம் பறிப்பதற்காக நின்றுக்கொண்டிருந்தாக சொன்னார். பின்னர் அவர் வைத்திருந்த அருவாளை அத்தாட்சியில் கைப்பற்றி எதிரியை காவல் நிலையம் அழைத்து வந்தேன். அத்தாட்சியில்

தமிழ்செல்வம் மற்றும் காசி விஸ்வநாதன் ஆகியோர்கள் கையெழுத்து செய்தார்கள். அந்த அத்தாட்சி அசாஆ.1 ஆகும். இது குறித்து ஆய்வாளர் விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

எதிரியை 50 மீட்டர் துாரத்தில் பார்த்தோம். என்னைவிட எதிரி வேகமாக ஓடக்கூடிய வகையில் பலமிக்கவர் என்றால் சரிதான். என்னுடன் காசிவிஸ்வநாதன் இருசக்கர வாகனத்தில் வந்தார். தமிழ்செல்வன் வேறு வாகனத்தில் வந்தார். முதலில் எதிரியை காசி விஸ்வநாதன் பிடித்தார். நாங்கள் சம்பவயிடத்தில் இருந்து எதிரியை பிடித்து காவல் நிலையம் கொண்டு செல்வதற்கு அரை மணி நேரம் ஆகியிருக்குமா என்றால் 20 நிமிடம் ஆகியது. அருவாளை காசி விஸ்வநாதன்தான் கையில் வைத்திருந்து காவல் நிலையம் கொண்டு வந்தார். என்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சி அசாஆ.1 என்னால் தயாரிக்கப்பட்டது இல்லை என்றால் சரிதான். நான் காவல் நிலையம் சென்றபிறகு தான் ஆய்வாளருக்கு இந்த வழக்கு விவரம் தெரியும் என்றால் சரிதான். காசி விஸ்வநாதன் ஆயுதத்தை ஆய்வாளரிடம் கொடுத்தார் என்றால் நான் வாங்கி ஆய்வாளரிடம் கொடுத்தேன். எங்கள் காவல் நிலைய சுற்றுவட்டார பகுதியில் அருண் என்ற நபர் பிரபல ரவுடி என்றால் எனக்கு தெரியாது. நான் அருண் என்ற நபருக்கு எதிரி நண்பர் என்பதனால் அருணை கண்டுபிடிப்பதற்காக வேண்டி எதிரியை கைது செய்து அவரை நாங்கள் போலீசார் தாக்கினோம் என்றாலும்,அதனால் அவருக்கு காயம் ஏற்பட்டது என்றாலும், எங்கள் மீது எதிரி நடவடிக்கை எடுப்பார் என்பதனால் எதிரி மீது இவ்வாறு ஒரு பொய் வழக்கு புனைந்தோம் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில்

எதிரியை பிடித்து செல்லவில்லை என்றாலும், அவரிடமிருந்து ஆயுதத்தை கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. கைப்பற்றியதாக சொல்லும் ஆயுதம் நாங்கள் உற்பத்தி செய்து இரண்டு நாட்கள் காலதாமதத்துடன் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தோம் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.04.28 11:08:55 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.550/2025**
**வழக்கு சாட்சி PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தமிழ்செல்வன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | குருசாமி | தொழில் | : | தலைமைக்காவலர் |
| கிராமம் | : | மதுரை | வயது | : | 40 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 27.04.2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது ஊத்துமலை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.06.2025ம் தேதி மாலை 16.00 மணிக்கு நானும், என்னுடன் சார்பு ஆய்வாளர் சோலையப்பன், முதல் நிலை காவலர் 2010 காசி விஸ்வநாதன் ஆகியோருடன் ஊத்துமலை – சங்கரன் கோவில் ரோட்டில் அண்ணாமலை புதுார் விலக்கில் விலக்கிலிருந்து அண்ணாமலை புதுார் செல்லும் ரோட்டில் சந்தேகப்படும் படியாக ஒரு நபர் நின்றுக்கொண்டிருந்தார். அவரை சோதனை செய்தபோது அவர் தன்னுடைய பெயர் முத்துக்குமார் என்று கூறினார். அவருடைய அப்பா பெயர் மற்றும் முகவரி கூறினார். அவரது முதுகுக்கு பின்னால் பெரிய அருவாளை வைத்திருந்தார். உதவி ஆய்வாளர் என் முன்னிலையில் அருவாளை அத்தாட்சியில் கைப்பற்றி எதிரியை காவல் நிலையம் அழைத்து வந்தார். அத்தாட்சியில் நானும், காசி விஸ்வநாதன் ஆகியோர்கள் கையெழுத்து செய்தோம். அந்த அத்தாட்சி அசாஆ.1 ஆகும். இது குறித்து ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

எதிரியை 50 மீட்டர் துாரத்தில் பார்த்தோம். எதிரியை நான்தான் முதலில் ஓடி பிடித்தேன். நானும், காசி விஸ்வநாதனும் ஒரு பைக்கில் சென்றோம். உதவி ஆய்வாளர் சோலையப்பன் வேறொரு பைக்கில் சென்றார். எதிரி என்னை தாக்குவதற்கு முயற்சி செய்தாரா என்றால் இல்லை. நான் காவல் உதவி ஆய்வாளர் தயாரித்த அத்தாட்சியில் தான் கையெழுத்து செய்தேன். நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் எதிரியை பிடித்து செல்லவில்லை என்றாலும், அவரிடமிருந்து ஆயுதத்தை கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. கைப்பற்றியதாக சொல்லும் ஆயுதம் நாங்கள் உற்பத்தி செய்து இரண்டு நாட்கள் காலதாமத்ததுடன் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தோம் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.04.28 11:09:04 +0530